**இமதுவ பிரதேச சபை**
**காலி மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, இமதுவ பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது பூர்த்தி செய்யப்பட்ட கோமல ஹொரமடுள்ள சமூக நீர் செயற்திட்டத்தை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக கிடைத்திருந்த ரூபா 267,583 தொகை மூலதன உதவியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின் போது நிறைவேற்றப்படாத நிர்மாண வேலை ஒன்று மற்றும் 2018 ஆண்டின் போது நிறைவேற்றுவதற்கு தீர்மானித்திருத்த இரண்டு நிர்மாண வேலைகளுக்காக கூட்டுத்தொகை ரூபா 12,859,948 தொகை செலுத்த வேண்டிய மூலதன உதவியின் கீழ் கணக்கீடு செய்திருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்காக செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக நிதிக் கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத்தொகை ரூபா 62,117,502 தொகைக்கான 06 கணக்கு விடயங்களுடன் தொடர்புடைய மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய துணைப்பதிவேடுகளின் காட்டப்பட்டுள்ள மீதிகள் இடையே சமமின்மைகளின் கூட்டுத்தொகை ரூபா 55,258,189 தொகையாக இருந்தது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**பெற வேண்டிய கணக்குகள்**

கூட்டுத்தொகை ரூபா 213,582 தொகைக்கான 08 பெற வேண்டிய மீதிகள் மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

**தகவல்கள் கணக்காய்விற்காக சமர்பிக்கப்படாமை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையினால் கூட்டுத்தொகை 138,178,383 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாண ங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| | ரூபா. | |
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | | |
| (i) விதி 33 | - | வீதவரி செலுத்துவதை புறக்கணிக்கும் ஆட்கள் தொடர்பாக அட்டவணை மற்றும் ஆதனங்களை தடை செய்யும் எழுத்தாக்கத்தினைப் பட்டியல் தயாரித்திருக்வில்லை. |
| (ii) விதி 59 | | சபையின் அதிகார பிரதேசத்தில் கணிப்பீடு ஒன்று மேற்கொண்டு கைத்தொழில்கள் தொடர்பான பட்டியல் தயாரித்திருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாய சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை<br>நிதிப் பிரமாணம் 571(1)(2) | 4,926,802 | 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு 02 வருட காலம் கழிந்துள்ள வைப்பு மீதிகளை வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

**1.3.6 போதிய அதிகாரத்தினால் உறுதிப் படுத்தப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் பிரதேச சபை சட்டத்தின் 182 ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் பிரரேரணை அங்கீகாரத்துடன் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம்

பெற்றுக்கொள்ளாமல் 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை பெற வேண்டிய மூலதன உதவி என கணக்கீடு செய்திருந்த ரூபா 23,251,988 தொகை மீளாய்வாண்டிற்கான இலாபத்திற்கு எதிராக பதிவழித்திருந்ததுடன், அவ்வாறு 25 ஆம் இலக்க நாட்குறிப்பின் மூலம் 2013 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை செலுத்த வேண்டிய மூலதன உதவி என கணக்கீடு செய்திருந்த ரூபா 24,098,739 தொகையினையும் மீளாய்வாண்டின் போது இலாபத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) உள்ளூராட்சி விளையாட்டு விழாவுக்காக அங்கீகாரம் இன்றி ரூபா 46,714 தொகை சபை நிதியத்தில் இருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 3,843,369 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 4,014,609 தொகை ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்காக சமர்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டை இடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமனம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 151,200 | 123,209 | 300,260 | 248,391 | 151,200 | 123,109 | 184,601 | 352,275 |
| வாடகை | 3,100,000 | 3,139,202 | 3,154,202 | - | 2,350,000 | 2,478,487 | 2,494,487 | - |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 200,000 | 153,700 | 170,900 | 152,466 | 1,800,000 | 102,100 | 114,650 | 159,916 |
| ஏனைய வருமானங்கள் | 2,900 | - | 21,106 | - | 2,000 | - | 45,217 | - |
| மொத்தம் | 3,454,100 | 3,416,111 | 3,646,468 | 400,857 | 4,303,200 | 2,703,696 | 2,838,955 | 512,191 |

### 2.2.2 வருமானம் சேகரித்தலின் செயலாற்றுகை

மீளாய்வாண்டிற்கான மதிப்பீட்டு வருமானம் ரூபா 3,454,100 தொகையும், சிட்டையிடப்பட்ட வருானம் ரூபா 3,416,111 தொகையும் ஆகும். ரூபா 521,191 தொகை ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய தொகை ரூபா 3,928,302 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 3,646,468 தொகை காணப்பட்டமையால் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை வருமாமன் ரூபா 400,857 தொகையாகும்.

### 2.2.3 வீத வரி மற்றும் வரி

பின்வரும் அவதானிப்பு மேற் கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 423,836 தொகையான வீதவரி தொகையில் மீளாய்வாண்டின் போது 47 சதவீதம் அறவீடு செய்திருக்கவில்லை.

(ஆ) 1999 ஆண்டின் பின்னர் மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளாமையால் பெற வேண்டிய பெருண்பான்மையான வீதவரி வருமானத்தை சபை இழந்துள்ளது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 134(1) மற்றும் (2) இன் பிரகாரம் உதவி ஆணையாளரின் அங்கீகாரத்துடன் முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை இனங்கண்டு வீதவரி அறவீடு செய்வது தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

### 2.2.4 ஏக்கர் வரி

முன்னைய ஆண்டு மற்றும் மீளாய்வாண்டிற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 67,891 தொகை ஏக்கர் வரி தொகையில் மீளாய்வாண்டின் போது ரூபா 18,170 தொகை அதாவது 26 சதவீத அறவீடு செய்திருந்தது. இதன் காரணமாக வருட இறுதியில் நிலுவைத் தொகை ரூபா 49,721 தொகையாக காணப்பட்டது.

### 2.2.5 அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட அனுமதிப் பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரி பெறுமதி முறையே ரூபா 325,116 தொகை மற்றும் ரூபா 1,172,300 தொகையாகும். மீளாய்வாண்டிற்கான வியாபார அனுமதிப் பத்திரக் கட்டணம் அறவீகள் 53 சதவீதம் மற்றும் வியாபார வரி அறவீடு 63 சதவீதம் ஆகக் காணப்பட்டதுடன், வருட இறுதியில் காணப்பட்ட நிலுவை வரித் தொகையினை அறவீடு செய்வதற்காக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 2.2.6 நீதி மன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் 2017 திசெம்பர் 31 திகதி உள்ளவாறு முத்திரைக் கட்டணம் ரூபா 16,354,807 மற்றும் நீதி மன்றத் தண்டப்பணம் ரூபா 2,017,996 தொகை கிடைக்க வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம் மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது பெருந்தெருக்கல் தொடர்பாக விடயங்களை முறைப்படுத்துதல்

மற்றும் நிர்வகித்தல், பொது மக்களின் சுகபோக வாழ்வு, வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த கடமைகளை நிறைவேற்றுதல் தொடர்பாக கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) செயற்திட்டங்கள் தாமதித்தல்**

(i) பஹலவத்த, பெத்தேகெதர, கழுவல பிரதான பாதையினை போக்குவரத்திற்கு பயன்படுத்த முடியாதவாறு சேதமடைந்திருந்ததுடன் சபை நிதியத்தை பயன்படுத்தி இந்த பாதையை செப்பனிடுமாறு மாகாண ஆளுனர் செயலாளரின் G/SA/16/2-259 ஆம் இலக்க 2017 ஆக்டோபர் 02 ஆம் திகதியின் கடிதத்தின் மூலம் கட்டளை இடப்பட்டிருந்த போதிலும், அந்த நிர்மாண வேலையின் வேலைகள் 2018 மே 09 ஆம் திகதி அளவிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மாகாண குறிப்பிட்ட மாணியங்களின் கீழ் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட வேண்டிய இமதுவ நகரத்தின் தேகாரோக்கிய வடிகால் முறைமையொன்று நிர்மாணிப்பதற்காக ரூபா 1,000,000 தொகை மற்றும் திண்மக் கழிவுப் பொருள் நிகழ்ச்சித் திட்டத்திற்காக ரூபா 1,000,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 மே வரை அந்த நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) திண்மக் கழிவுப் பொருட்கள் முகாமைத்துவம்**

சபைக்கு குப்பை முகாமைத்துவத்திற்காக முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாததுடன் ஹொரதொட கந்த என்ற 10 ஏக்கர் அளவான பெரிய காணி ஒன்றில் சுமார் ¼ ஏக்கர் பகுதியில் குப்பை போடப்பட்டு காணப்பட்டது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஒரு நாளைக்கு சேகரமாகும் சுமார் 01 தொன் குப்பையில் இருந்து உக்கக் கூடிய குப்பை அந்த வளவில் கிடங்குகள் வெட்டப்பட்டு மண்ணிட்டு மூடப்படல் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) உக்காத குப்பை இமதுவ வர்த்தக கட்டிடத் தொகுதியில் 02 கடைகளில் கலஞ்சியப் படுத்தியிருந்ததுடன், 2017 ஆண்டின் போது இவ்வாறு சேகரிக்கப்பட்ட உக்காத பொருட்களின் மூலம் ரூபா 3,200 இலாபமொன்று சபை ஈட்டியிருந்தது.

(iii) சபையின் குப்பைகள் போடுவது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்று காணப்படாததுடன், சுற்றாடல் அனுமதிப் பத்திரம் ஒன்று பெற்றுக் கொள்ளாமையால் காணியில் குப்பைகள் போடப்பட்டு வருகின்றன.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 நிகழ்ச்சி நிரலில் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்காகிய உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபை அதிகார பிரதேசத்தில் பொது மக்களின் வாழ்க்கை நிலைமை மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக நீண்டகால திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

## 3.2 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2010 ஆகஸ்ட் 17 திகதிய பீஈ/01/01 இலக்க மின்சக்தி மற்றும் வலு அமைச்சு செயளாலரின் சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளூராட்சி நிறுவனங்களின் வீதி வெளிச்சப்படுத்தல் தொடர்பாக செயற்பட்டிருக்காமையினால் சபையினால் பராமரிக்கப்படும் 2,000 வீதி விளக்குகளுக்காக மேற்கொள்ளப்படும் செலவுகளை மீளளிப்புச் செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான கப் வண்டி ஒன்று 2017 அக்டோபர் 02 திகதி விபத்திற்கு உள்ளாகியிருந்ததுடன் நிதிப் பிரமாணம் 104(3) மற்றும் 104(4) இன் பிரகாரம் அறிக்கை 2018 மே 09 திகதி வரை சமர்ப்பித்து இருக்கவில்லை. மேலும் ஏற்பட்டிருந்த நட்டத்தை நிதிப் பிரமாணம் 110 இன் பிரகாரம் இழப்புக்கள்/ சேதங்கள் பதிவேட்டில் பதிந்திருக்கவில்லை.

## 3.3 மனித வள முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பதவியணித் திட்டத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணிகளை மிகைத்து 28 பேரும் அங்கிகரிக்கப்படாத பதவிகள் 12 பேரும் ஆக மிகை ஊழியர்கள் 40 காணப்பட்டதுடன், பதவி வெற்றிடங்கள் 05 காணப்பட்டது. எவ்வாறாயினும், மிகை பதவியணியினை முறைப்படுத்துவது மற்றும் வெற்றிடங்களை நிரப்புதல் தொடர்பாக சபையின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அமைய, தற்காலிக, பிரதியீட்டு மற்றும் ஒப்பந்த அடிப்படையில் சேர்க்கப்பட்டிருந்த 12 ஊழியர்களின் சம்பளங்கள், வேதனங்கள் செலுத்துவதற்கு ரூபா 2,998,463 தொகை சபை நிதியத்தில் இருந்த செலவிடப்பட்டிருந்தது.

(இ) மாவெல்ல ஹொரதொட கந்த என்ற காணியின் 2015 ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் தகன சாலைக்கு தகனசாலை நடத்துனர் மற்றும் உதவியாளர் நியமனம் செய்திருக்கவில்லை.

(ஈ) சபையினால் அங்கீகரிக்கப்பட்ட ஆளணித் திட்டத்தின் பிரகாரம் அலுவலக தொழிலாளர் பதவியில் வெற்றிடம் காணப்படாத போதிலும், பெண் அலுவலக உதவியாளர் ஒருவர் சேர்க்கப்பட்டு 2014 அக்தோபர் 24 ஆம் திகதி முதல் 2018 ஜுலை வரை சேவையில் ஈடுபடுத்தியிருந்ததுடன், அப் பெண் ஊழியருக்கு இரண்டாம் தொகுதிக்குரிய முகாமைத்துவ உதவியாளர் சேவைகளின் பதவிகளுக்கான கடமைகள் சாட்டப்பட்டிருந்தன.

(உ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,746,437 தொகைக்கான சபையின் பதவியணிக் கடன் மீதியில் அடங்கியிருந்த சேவையை விட்டு சென்றிருந்த 03 ஊழியர்களிடம் ரூபா 81,185 தொகை மற்றும் 2012, 2013 மற்றும் 2015 ஆண்டுகளின் போது இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்த 03 உத்தியோகத்தர்களிடம் ரூபா 78,134 தொகை சபைக்கு கிடைக்க வேண்டியிருந்தது.

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரித்தாக்கப்படாத சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபையினால் பயன்படுத்தப்படுகின்ற ரூபா 1,100,100 தொகை பெறுமதியான கப் வண்டி ஒன்றின் உரிமையை உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரையும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2006 ஆண்டின் போது ஹபறாதுவ பிரதேச சபை அதிகார பிரதேசத்தில் ஹபராதுவ மற்றும் இமதுவ பிரதேச சபைகள் என வேறுபடுத்தும் போது கப் வண்டி ஒன்று வழங்கப்பட்டிருந்த போதிலும் அதன் உரிமையை இமதுவ பிரதேச சபைக்கு உரித்தாக்கியிருக்கவில்லை. அதே போல் இந்த கப் வண்டியை திருத்துவதற்காக இயந்திர பொறியியலாளரிடம் அறிக்கை ஒன்று கோரிய போதிலும் அறிக்கை சமர்பித்திருக்காமையினால் திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் விளைவற்று நிறுத்தப்பட்டிருந்தது.

### 3.4.2 விளைவற்ற / குறைபயன்பாட்டுச் சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) பொது நிர்வாக, மாகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் சனநாயக நிர்வாகம் தொடர்பான அமைச்சில் இருந்து 2014 திசெம்பர் 20 ஆம் திகதி சபைக்கு வழங்கப்பட்டிருந்த டிபர் வண்டி வழங்கிய நாள் முதல் ஓட்டத்திற்காக பயன்படுத்தியிருக்காதுடன், விளைவற்று நிறுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான 03 டிரக்டர் வண்டிகளை பயன்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டதுடன், அந்த வாகனத்தின் அகற்றுதல் தொடர்பாக 2015 ஜூலை 10 திகதி 02/2015 இலக்கம் கொண்ட திறைசேரி சுற்றறிக்கையில் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுக்கு இடையே கீழ் விவரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 07 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 10,651,665 தொகையான சேமிப்புக்கள் காணப்பட்டதுடன், சேமிப்புக்களின் சதவீதம் 01 சதவீதம் முதல் 60 சதவீத இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 07 வருமான விடயங்கள் நெருங்கியிருக்காத இலக்காகிய வருமானங்களின் கூட்டுத்தொகை ரூபா 19,982,314 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 19 சதவீம் முதல் 75 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளகக் கணக்காய்வு**

சபையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தர் நியமனம் செய்திருந்த போதிலும், போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கள் செயற்படுத்தல்**

2009 ஜுன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவினை நிறுவுதவற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.4 தீர்க்கப்பட்டிருக்காத கணக்காய்வு பந்திகள்**

முன்னைய ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் பந்திகள் 2.2.3 (அ) மற்றும் (ஈ) 2.2.5(அ) மற்றும் (ஆ) இன் மூலம் சுட்டிக்காட்டியிருந்த குறைபாடுகளை சரிசெய்வதற்கு இணங்கியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் சரி செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபை தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருந்ததுடன், பின்வரும் கட்டுபாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

| | முறைமை | | முறைபாடு |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு மற்றும் பதிவேடு பேணப்படல் | (i) | கணக்கு மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமை. |
| | | (ii) | நிதிக் கூற்றுகள் மற்றும் அட்டவணைகளில் மீதிகள் சமப்படாமை |
| | | (iii) | பதிவேடுகள் பேணப்பட்டிருக்காமை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் | | விரிவான மற்றும் முறையான நிலையான சொத்துக்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | சில வாகனங்கள் விளைவற்றுக் காணப்படல் |
| | | (ii) | வாகன விபத்துக்கள் தொடர்பான நிதிப் பிரமாணங்களின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை |
| (ஈ) | வருமானம் சேகரித்தல் | (i) | நிலுவை வருமானம் அறவீடு செய்ய வழமையில்லாத தாமத காலம் ஒன்று காணப்பட்டது. |
| | | (ii) | வருடாந்த வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக கணிப்பீடு பேணப்பட்டிருக்கவில்லை |
| | | (iii) | புதிய வருமானம் உருவாக்கும் வழிவழங்கள் தொடர்பாக கவனம் செலுத்தியிருக்கவில்லை. |
| (உ) | பதவியணி முகாமைத்துவம் | | பதவியணிகள் திட்டத்தை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |